රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
**பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**
**MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT**

ඒකාබද්ධ සේවා අංශය **இணைந்த சேவைகள் பிரிவு** **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතනය<br>தொலைபேசி: **(94) 011- 2694560**<br>Telephone | ෆැක්ස්<br>தொலைநகல்: **(94) 011- 2692254**<br>Fax | ඊ-මේල්<br>மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk**<br>E-mail | වෙබ් අඩවිය<br>இணைத்தளம்: **www.pubad.gov.lk**<br>Web Site |
|---|---|---|---|

| මගේ අංකය<br>எனது இல<br>My No | රා.ක.ස.සේ./අධි./ස්.මා/2018 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி:<br>Date | 2017.11.28 |
|---|---|---|---|---|---|

அமைச்சு செயலாளர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

***<u>2018 இற்கான வருடாந்த இடமாற்றக் கட்டளை விடுத்தல் - அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதி உயர் தரம்</u>***

மேற்படி விடயம் தொடர்பான எனது சம இலக்கமும் **2017.10.24** ஆந் திகதியும் கொண்ட கடிதம் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள வருடாந்த இடமாற்றக் குழுவின் முன்மொழிவுகள் மற்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மீது தங்களின் தயவான கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்படி இடமாற்ற முன்மொழிவுகள் சம்பந்தமாக என்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட விடய எடுத்துரைப்புகள் பற்றி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகள் தொகுதி I இன் XVIII ஆம் அத்தியாயத்தின் 210 மற்றும் 211 ஆகிய பிரிவுகளுக்கு அமைவான வருடாந்த இடமாற்ற முன்மொழிவுகள் மீளாய்வுக் குழுவின் தீர்மானங்களை இத்துடன் அனுப்பி வைத்துள்ளேன். இதன் மூலமாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு கட்டுப்பட்டதாக மேலே குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பிலான எனது சம இலக்கமும் 2017.10.24 ஆந் திகதியும் கொண்ட கடிதம் மூலமாக உத்தேச 2018 இற்கான வருடாந்த இடமாற்றக் கட்டளையினை இத்தால் விடுக்கிறேன்.

03. **இடமாற்றக் கட்டளைகள் தொடர்பிலான மேன்முறையீடுகள்**

(அ) இடமாற்றக் கட்டளைகள் தொடர்பாக திருப்தியடையாத உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் XX ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டினைச் சமர்ப்பிக்க இயலும்.

(ஆ) மீளாய்வுக் குழுவுக்கு மேன்முறையீட்டினைச் சமர்ப்பித்த உத்தியோகத்தர்கள் மாத்திரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் மேன்முறையீட்டினைச் சமர்ப்பிக்கலாம்.

(இ) மேன்முறையீடுகளை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கும் பொருட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள **3a** வது அட்டவணைக்கிணங்க திணைக்களத் தலைவர்கள் ஊடாக எனக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அத்துடன் மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நிரூபிப்பதற்காக சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் இணைத்து அனுப்பிவைப்பீராக.

(ஈ) சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் **2017.12.07** ஆம் திகதியன்றோ அதற்கு முன்னராகவோ எனக்குக் கிடைக்கத்தக்கதாக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதோடு அத்திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் நிராகரிக்கப்படலாம்.

04. **வருடாந்த இடமாற்றக் கட்டளை நடைமுறைப்படுத்தல்.**

2018 ஆம் ஆண்டுக்கான இடமாற்றக் கட்டளைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படக்கூடிய திருத்தங்களுக்கு கட்டுப்பட்டதாக உரிய தினத்திலேயே நடைமுறைப்படுத்தப்படும். அதற்கிணங்க தங்கள் அமைச்சில் / திணைக்களத்தில் / நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற இடமாற்றம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் உரிய திகதியில் புதிய சேவை நிலையங்களில் கடமைகளை பொறுப்பேற்கத்தக்கதாக பிரதியீட்டு அலுவலர் வரும்வரை தடுத்துவைக்காமல் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கின்றேன். 2018 வருடாந்த இடமாற்றக் கட்டளைக்கிணங்க சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் சேவைக்குச் சமூகமளித்தமைக்கான மற்றும் விடுவிக்கப்பட்டமைக்கான கடிதங்களின் பிரதிகளை மூலம் எனக்கு அறிக்கையிடல் வேண்டும்.

வருடாந்த இடமாற்றங்களின் கீழ் என்னால் வழங்கப்பட்டுள்ள இடமாற்றக் கட்டளைக்கு மேலதிகமாக அமைச்சு அல்லது திணைக்கள உள்ளக இடமாற்றங்களின் கீழ் எவரேனும் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் கிடைத்தாலும், இந்த மீளாய்வுக்குழுக்களின் தீர்மானங்களிலான திருத்தங்களுக்கு கட்டுப்பட்டதாக 2017.10.24 ஆந் திகதிய இடமாற்றக் கட்டளை நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதைக் கருத்திற் கொள்வீராக.

ஒப்பம் / ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு